RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 304 | நவம்பர்.4 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மீனவர்கள் கைதுக்கு நிரந்தரத் தீர்வு: மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க முதல்வருக்கு அன்புமணி கோரிக்கை



சென்னை, நவ.04-

முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் மீனவர் சமுதாய பிரதிநிதிகளை அழைத்துச் சென்று பிரதமரை சந்தித்து மீனவர்கள் கைது செய்யப்படும் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "நாகை மாவட்டத்தில் இருந்து வங்கக் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 35 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய 3 விசைப் படகுகளும், ஒரு நாட்டுப் படகும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது கண்டிக்கத்தக்கது.

ராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரு நாட்களுக்கு முன் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் தாக்கி விரட்டியடித்தனர். இதையடுத்து அவர்கள் மீன் பிடிக்க முடியாமல் பாதியில் திரும்பினார்கள். அதனால் ஏற்பட்ட பதற்றம் விலகுவதற்கு முன்பாகவே தமிழ்நாடு மற்றும் புதுவையைச் சேர்ந்த 35 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது மீனவர் சமூகங்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 74 மீனவர்கள் இன்றைய நிலவரப்படி இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்த பல ஆண்டுகளாக பறிமுதல் செய்யப்பட்ட 242 மீன்பிடிப் படகுகளும் இன்னும் மீட்கப்படாமல் உள்ளன. கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 15 நாட்களில் விடுதலை செய்யப்பட்டு வந்த நிலை மாறி, இப்போது தமிழக மீனவர்களுக்கு ஆண்டுக் கணக்கில் சிறையும், கோடிக்கணக்கில் அபராதமும் விதிக்கப்படுகிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கை அரசு திட்டமிட்டே இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் வாடிக்கையாகிவிட்ட நிலையில், அதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வில்லை. தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுடன் முதல்வர் ஸ்டாலின் அவரது கடமையை முடித்துக் கொள்கிறார். இது மட்டுமே தமது பணியல்ல என்பதை அவர் உணர வேண்டும். அமைச்சர்கள் மற்றும் மீனவர் சமுதாய பிரதிநிதிகளை அழைத்துச் சென்று பிரதமரை சந்தித்து மீனவர்கள் கைது செய்யப்படும் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணும்படி வலியுறுத்த வேண்டும்" என்று அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

## ககன்யான் திட்டத்தில் ஆளில்லா விண்கலன் மார்ச் மாதத்துக்குள் ஏவப்படும்: இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்

சென்னை, நவ.04-

ககன்யான் திட்டத்தின் ஆளில்லா விண்கலன் மார்ச் மாதத்துக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் (இஸ்ரோ) தலைவர் வி. நாராயணன் கூறினார்.

அவர் ஹரிகோட்டாவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இஸ்ரோ வரலாற்றில் முதல்முறையாக, செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்ட பிறகும், கிரையோஜெனிக் இயந்திரம் மீண்டும் 100 விநாடிகள் இயக்கப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது பெரிய சாதனையாகும். இதன்மூலம் பல்வேறு செயற்கைக் கோள்களை, ஒரே ராக்கெட்டில் சுமந்து சென்று புவிவட்டப் பாதைகளில் நிலைநிறுத்த முடியும்.

அடுத்தகட்டமாக 5 மாதங்களில் 7 ராக்கெட் ஏவுதல் திட்டங்களை செயல்படுத்த உள்ளோம். எல்விஎம் 3எம் 6 ராக்கெட் திட்டம் மூலம் தனியார் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் டிச. 2ம் வாரத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. குலசேகரப் பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைந்த பின்னர் 3 வாரங்களுக்கு ஒரு ராக்கெட் ஏவப்படும்.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தை சாத்தியமாக்குவதற்கான அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறோம். முன்னதாக, 3 ஆளில்லா விண்கலன்களை விண்வெளிக்கு அனுப்ப வேண்டும். அதில் முதலாவது கலனை மார்ச் மாதத்துக்குள் அனுப்பவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த 5 ஆண்டுகளில 50 விண்வெளி திட்டங்களை செயல்படுத்த பிரதமர் இலக்கு நிர்ணயித்துள்ளார். அதற்காக தீவிரமாக பணியாற்றி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். எல்விஎம்3 ராக்கெட் திட்ட இயக்குநர் விக்டர் ஜோசப், சிஎம்எஸ்3 செயற்கைக்கோள் திட்ட இயக்குநர் ராஜேந்திர குமார் உடனிருந்தனர்.

## தவெக மகளிரணி, இளைஞரணி, மாணவரணி, தொண்டரணி நிர்வாகிகளை நியமித்தார் விஜய்

சென்னை: நவ.4-

தமிழக வெற்றிக் கழகத்தின் 64 கழக மாவட்டங்களுக்கான மாவட்ட அளவிளான மாணவரணி, மகளிரணி, தொண்டரணி, இளைஞரணி உள்ளிட்ட பதவிகளுக்கான பொறுப்பாளர்களை நியமித்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.



கடந்த ஆண்டு தமிழக வெற்றிக் கழகம் கட்சியை தொடங்கிய விஜய், மாநில மாநாடுகளை நடத்தியதுடன், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளையும் விறுவிறுப்பாக நடத்தி வந்தார். கடந்த செப்டம்பர் 27ல் கரூர் விஜய் நடத்திய பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து ஒரு மாதத்துக்கும் மேலாக தவெக கட்சியும், அதன் தலைவர் விஜய்யும் முடங்கிய நிலையில் இருந்தனர்.

இந்தச் சூழலில், சமீபத்தில் கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரத்துக்கு அழைத்து ஆறுதல் கூறினார் விஜய். தொடர்ந்து நிர்வாகக் குழு கூட்டத்தையும் நடத்தியது தவெக.

இதனைத் தொடர்ந்து தற்போது கட்சியின் இளைஞரணி, தொண்டரணி, மாணவரணி பொறுப்பாளர்களின் பட்டியலை இன்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதில் 64 கழக மாவட்டங்கள் அடங்கும். மேலும், 65 கழக மாவட்டங்களுக்கான மகளிரணி நிர்வாகிகளையும் விஜய் நியமித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

வரும் நவம்பர் 5 ஆம் தேதி தவெகவின் சிறப்பு பொதுக்குழு கூடவுள்ள நிலையில், முக்கிய அணிகளின் நிர்வாகிகளை விஜய் அறிவித்துள்ளது அக்கட்சியின் தொண்டர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறப்பு பொதுக்குழுவில், தேர்தல் மற்றும் பிரச்சாரம் குறித்த முக்கிய அறிவிப்புகளை விஜய் வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## அதிமுக மாவட்ட பொறுப்பாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்: பழனிசாமி அறிவுறுத்தல்

சென்னை, நவ.04-

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த பணியை மாவட்ட பொறுப்பாளர்கள் விழிப்புடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.



தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடி முகவர்கள், தொடர்புடைய வாக்குச்சாவடிகளில், சரியான வாக்காளர் தான் வாக்களிக்கிறாரா என்பதை உறுதி செய்யும் பணி மட்டும் வழங்கப்படும். ஆனால் அதிமுக சார்பில், கூடுதலாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பாக கிளை உறுப்பினர்களாக தலா 9 பேர் நியமிக்கப் பட்டுள்ளனர். ஒவ்வொரு பாக கிளையிலும் 3 பெண்கள், தகவல் தொழில்நுட்ப அணி, மாணவரணி, வழக்கறிஞர் அணி உள்ளிட்ட அணிகளை சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் 2026 தேர்தலுக்காக அதிமுக சார்பில் ஏராளமான பிரச்சார முன்னெடுப்புகள் தொடங்கப்பட உள்ளன. அவற்றை வீடு வீடாக கொண்டு சேர்க்கும் பணி, பாக கிளை முகவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பாக கிளை முகவர்களை ஒருங்கிணைக்கும் பணியை அதிமுகவின் தகவல் தொழில்நுட்ப அணி மேற்கொள்கிறது. அதிமுகவின் தேர்தல் பிரச்சார வியூகங்களை எந்த வடிவத்தில் எப்படி வீடு வீடாக கொண்டு சேர்ப்பது என்கிற பயிற்சியை தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்தவர்கள் பாக கிளை முகவர்களுக்கு வழங்க உள்ளனர்.

இதற்கிடையில், அதிமுக தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட, மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி தலை மையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், பாக முகவர்களை ஒருங்கிணைப்பது எப்படி, அவர்களிடம் எடுத்துரைத்து அவர்கள் மூலமாக அதிமுகவின் பிரச்சாரத்தை வீடு வீடாக கொண்டு சேர்ப்பது எப்படி என்று முதலில் தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கும் பயிற்சியை பழனிசாமி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து பாக கிளை முகவர்களை நியமிக்கும் பணிக்காக நியமிக்கப்பட்ட மாவட்ட பொறுப்பாளர்களுடனான ஆலோசனை கூட்டம் பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர்களுடன் தனித்தனியே ஆலோசனை நடத்தினார். இதில் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் கட்சி வளர்ச்சி பணிகள், திமுக அரசுக்கு எதிராக மாவட்ட செயலாளர்கள் நடத்தியுள்ள போராட்டங்கள், கட்சியின் செல்வாக்கு, சாதக, பாதகங்கள், வெற்றி பெற வாய்ப்புள்ள, செல்வாக்கு மிக்க நிர்வாகிகள் தொடர்பாக பழனிசாமி கேட்டறிந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் கூட்டத்தில் பழனிசாமி பேசும்போது, "தங்களுக்கான மாவட்டங்களுக்கு மாவட்ட பொறுப்பாளர்கள் நேரில் சென்று, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை கண்காணிக்க வேண்டும். அப்பணியை முழுமையாக செய்து முடிக்க வேண்டும். இதில் பூத் கமிட்டி நிர்வாகிகளை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். இவர்களை ஒருங்கிணைக்க தகவல் தொழில்நுட்ப அணியினர் உதவுவார்கள்" என்றார்.

இவ்விரு கூட்டங்களிலும் கட்சியின் பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், துணைப் பொதுச் செயலாளர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை நிறுத்தாவிட்டால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு: அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, நவ.04-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை நிறுத்தாவிட்டால் தமிழக அரசியல் கட்சிகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தகுதியானவர்கள் அனைவரையும் விடுபடாமல் சேர்ப்பது, உயிரிழந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், இரட்டைப் பதிவு கொண்டவர்களின் பெயர்களை கண்டறிந்து நீக்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தியாவில் 1951 முதல் 2004 வரை 8 முறை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 21 ஆண்டுகளுக்குப் பிறகு, சமீபத்தில் பிஹாரில் இப்பணி நடைபெற்றது. விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் பணி கடந்த 28ம் தேதி தொடங்கியுள்ளது. இதுதொடர்பாக அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ள நிலையில், வீடு வீடாக ஆய்வு செய்யும் பணி நாளை (நவ.4) தொடங்க உள்ளது.

திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், இதில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்கும் வகையில், திமுக சார்பில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில் காங்கிரஸ், விசிக, மதிமுக உட்பட 49 கட்சிகள் பங்கேற்றன.



கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் விவரம்: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு (எஸ்ஐஆர்) நாட்டின் பல்வேறு கட்சிகள் தொடக்கம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மத்திய அரசின் கைப்பாவையாக, எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் செயல்படுவதை இந்த கூட்டம் கண்டிக்கிறது. சிறுபான்மையினர் வாக்குகள்: சிறுபான்மையினரின் வாக்குகள், பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கோடு, தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும்சதித் திட்டத்தோடு பிஹாரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து மக்கள் மன்றத்துக்கோ, உச்ச நீதிமன்றத்துக்கோ தேர்தல் ஆணையம் எந்த பதிலும் கூறவில்லை.

பிஹாரில் நடந்த குளறுபடிகளை சரிசெய்யாமல் தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர் திட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையை பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது. பிஹாரில் நடந்த எஸ்ஐஆர் பணி தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது, தமிழகத்தில் இந்த பணியை தேர்தல் ஆணையம் தொடங்கியதை ஏற்க முடியாது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 169ன்படி மத்திய அரசிதழில் முறைப்படி அறிவிப்பு வெளியிட்டு, அதன் மூலமாகவே வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்பட வேண்டும். மாறாக,தேர்தல் ஆணையமே தன்னிச்சையாக அறிவிப்பது, அரசியல் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்துக்கு எதிரானது. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சரிபார்ப்பில் நேர்மை, வெளிப்படைத் தன்மை இல்லை. 'ஆதார் சில நிபந்தனைகளுடன் அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்படும்' என்கிறது ஆணையம். இதன்மூலம், உண்மையான வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க திட்டமிடுவதாக தெரிகிறது. ஒரு வாக்காளர் ஆவணம் வழங்க வேண்டுமா, வேண்டாமா? யாரிடம் வழங்குவது? என்ற எந்த அடிப்படை கேள்விகளுக்கு பதில் இல்லை.

சரியான காலம் அல்ல: கணக்கெடுப்பு காலம் என நிச்சயிக்கப்பட்டுள்ள நவ.4 முதல் டிச.4 வரையிலான காலம் தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையின் உச்ச காலம். எனவே, பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்ற அச்சம் உள்ளது. வருவாய்த் துறையும் கனமழையால் எழும் சூழ்நிலைகளை கையாள்வதில் ஈடுபட வேண்டும். எனவே, இது கணக்கெடுப்புக்கு உகந்த காலம் இல்லை.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவதற்கு முன்பு உள்ள கால கட்டத்தில் கிறிஸ்துமஸ், பொங்கல் திருநாள் உள்ளன. இதனால், வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணியில் விடுபடும் வாக்காளர்களோ, சேர விரும்பும் வாக்காளர்களோ மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி தங்களது வாக்குரிமையை இழக்கும் நிலை ஏற்படும். எனவே, தமிழகத்தில் எஸ்ஐஆர் பணியை மேற்கொள்வது ஏற்கக்கூடியது அல்ல. இதை தேர்தல் ஆணையம் இப்போது கைவிட வேண்டும். ஆணைய அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட்டு, உச்ச நீதிமன்றவழிகாட்டுதலை வெளிப்படையாக கடைபிடித்து, உரிய அவகாசம் தந்து, 2026 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு, எந்த கட்சிக்கும் சார்பற்ற நிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் இந்த கருத்துகளை ஏற்காததால், தமிழகத்தில் வாக்காளர்கள் அனைவரது வாக்குரிமையையும் நிலைநாட்ட உச்ச நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழிஇல்லை. தேர்தல் ஜனநாயகத்தை காப்பாற்ற தமிழகத்தில்உள்ள அரசியல் கட்சிகள் சார்பில்உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்படும். இவ்வாறுதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பங்கேற்றது 49; புறக்கணிப்பு 11: அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு திமுக சார்பில் 60 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. திமுக நிர்வாகிகள் குழுவினர் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர். இந்நிலையில், திமுக கூட்டணியில் இல்லாத தேமுதிக உள்ளிட்ட கட்சி களும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றன. திமுக சார்பில் டி.ஆர்.பாலு, ஆர்.எஸ்.பாரதி, கி.வீரமணி (திராவிடர் கழகம்), செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), வைகோ (மதிமுக), திருமாவளவன் (விசிக), மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட்), பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்), கமல்ஹாசன் (மநீம), காதர் மொகிதீன் (இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்), ஈஸ்வரன் (கொமதேக), வேல்முருகன் (தவாக), ஜவாஹிருல்லா (மமக), தமிமுன் அன்சாரி (மஜக), பார்த்தசாரதி (தேமுதிக), வசீகரன் (ஆம்ஆத்மி), கருணாஸ் (முக்குலத்தோர் புலிப்படை) உட்பட 49 கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். அதிமுக, பாஜக மற்றும் பாமகவில் அன்புமணி தரப்புக்கு அழைப்பு விடுக்கவில்லை. தவெக, நாதக, ராமதாஸ் தரப்பு பாமக உள்ளிட்ட 11 கட்சிகளை அழைத்தும் பங்கேற்கவில்லை.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், நவ.04-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 317 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தர விட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதும க்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.சா.புகாரி அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்து கழுவன் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.இரா.காசி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி, மருத்துவமனையில் தேசிய தன்னார்வ குருதி கொடையாளர் தினத்ததை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையெற்று மருத்துவர்கள், செவிலியர்கள், தன்னார்வ குருதி கொடை அமைப்பாளர்கள் முன்னிலையில் விழிப்புணர்வு உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து தன்னார்வ குருதி கொடை அமைப்பாளர்கள் 35 நபர்களுக்கு கௌரவிக்கும் வகையில் பாராட்டு சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அமுதாராணி அவர்கள், இரத்த வங்கி பிரிவு மருத்துவ அலுவலர் மரு.மணிமொழி அவர்கள், அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.நூர் முகமது அவர்கள், துணை நிலைய மருத்துவர் மரு.கண்ணகி அவர்கள் மற்றும் அரசு மருத்துவர், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று, கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்

சிவகங்கை, நவ.04-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 314 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி. அரவிந்த் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.விஜயகுமார் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.அனிஷ் சத்தார் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 140 அங்கன்வாடி மையங்களில் பயிலும் 2,100 குழந்தைகளுக்கு முன்பருவ கல்வி வழங்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார்தொடங்கி வைத்தார்

கடலூர், நவ.04-

கடலூர், செம்மண்டலம் அங்கன்வாடி மையத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் பெற்றோர் தன்னார்வலர்களை கொண்டு முன்பருவ கல்வி வழங்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வளரிளம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடின்றி நல்ல ஆரோக்கியத்துடனும், நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.




பிறப்பு முதல் 72 மாதம் வரை உள்ள குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியினை உறுதிசெய்யும் நோக்கில் ஊட்டச்சத்து குறைபாடில்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிட ஊட்டச்சத்தினை உறுதி செய் எனும் திட்டத்தின் மூலம் தினந்தோறும் சுத்தம் மற்றும் சுகாதாரத்துடன் சுவையான ஆரோக்கியமான உணவுகள் தயாரிக்கப்பட்டு குழந்தைகளுக்கு பிடித்த வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தைகளுக்கு வருடத்திற்கு வண்ண சீருடைகளும் வழங்கப் படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் கடலூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் மொத்தம் 2023 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்கன்வாடி மையங்களில் உள்ள மழலையர்களுக்கு அடிப்படை கல்வியினை சிறந்த முறையில் வழங்கிட மாவட்ட நிருவாகத்துடன் கலிக்கே டாடா தொண்டு நிறுவனம் இணைந்து சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலம் பெற்றோர் தன்னார்வலர்களைக் கொண்டு முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 140 அங்கன்வாடி மையங்களில் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட 2,100 முன்பருவக்கல்வி பெறும் குழந்தைகளுக்கு நவம்பர் 2025 முதல் செப்டம்பர் 2026 வரை வகுப்புகள் நடத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் கற்றல்திறன் மேம்பட முழுமையான வளர்ச்சி குழந்தைகளுக்கு அளிப்பதாகும். உடல் வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, சமூக மன எழுச்சி வளர்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன் போன்ற திறன்களை வளர்க்கும் வகையில் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

அங்கன்வாடி மையங்களில் சிறந்த முறையில் வழங்கப்படும் அடிப்படை கல்வியின் மூலம் அவர்கள் பள்ளிக்கு செல்லும் போது எவ்வித பயமும், தயக்கமுமின்றி தொடக்க கல்வியினை எளிதாக எதிர்கொள்ள முடியும். தற்போது 140 மையங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு பெற்றோர்களும் அங்கன்வாடி மையப் பணியாளர்களும் முழுஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் படிப்படியாக அனைத்து மையங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் செல்வி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் அனிதா, கலிக்கே டாடா அறக்கட்டளை தொழில்நுட்ப அலுவலர் ஆஷிஷ், தன்னார்வலப் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பனை விதை நடும் விழா

இராமநாதபுரம், நவ.04-

இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் கிரசண்ட் உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் இயக்கம் சார்பாக பனை விதை நடும் விழா2025 வருகின்ற 05/11/2025 நடைபெற உள்ளது இவ்விழாவிற்கு ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பிரமுகர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு நமது பூமியை பசுமையால் பாதுகாக்கும் உயரிய நோக்கி நடைபெறும் இவ்விழாவிற்கு அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தலைமை ஆசிரியர் மட்டும் சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.



## மானாமதுரை சுற்றுவட்டார பகுதிகளில் நாளை மின்தடை

சிவகங்கை, நவ.04-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் நாளை (அக்15) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மானாமதுரை, சிப்காட், ராஜகம்பீரம், கட்டிக்குளம், மிளகனூர், முத்தனேந்தல், தெ. புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் சொர்ணப்பா அறிவித்துள்ளார்.

## தாம்பரத்தில் நமோ ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

செங்கல்பட்டு, நவ.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பேருந்து நிலையம் அருகே தாம்பரம் டு மண்ணிவாக்கம் நமோ ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா அமைப்பு சாரா செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் டி.சிவகலை தலைமையில் நடைபெற்றது இதில் சாமிக்கு படையல் போட்டு ஆட்டோக்களுக்கு வாழைக்கன்று கட்டி வர்ண பேப்பரில் அலகரித்து சந்தனமும் பூசி குங்குமம் வைத்து அலங்கரித்து ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது



இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் என்.ரகுராமன் அவர்களுக்கு மிக பிரமாண்டமாக வரவேற்பு அளிக்கப்பட்டு அதனை தொடர்ந்து ஆயுத பூஜையில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சாமி படத்திற்கு தீபாரத்தனை செய்து பூஜை துவங்கி வைத்தார் பின்னர் அதனைத் தொடர்ந்து பரிசு பொருட்கள் மற்றும் இனிப்புகள்

ஆட்டோ ஓட்டுனர்களுக்கு மாவட்டத் தலைவர் என்.ரகுராமன், மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.ஆர்.ரத்தினம், மற்றும் பாஜக கட்சி நிர்வாகிகள் ஆயுத பூஜை பொருட்களை நிகழ்ச்சியில் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் தாம்பரத்தில் நமோ ஆட்டோ ஓட்டுநர்கள் நலச்சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது இந்த நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் இ.யுவராஜ், செயலாளர் பி.அருண், பொருளாளர் பி.ஆனந்த் குமார், துணைத்தலைவர் எம்.சதாம் உசேன், துணைச் செயலாளர் எஸ்.பிரவீன் குமார், மற்றும் சங்க உறுப்பினர்கள், பாஜக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் சிறப்பித்தனர்

## கொடைக்கானலில் காய்த்து குலுங்கும் 'மிராக்கிள் ஃப்ரூட்' - என்ன ஸ்பெஷல்?

கொடைக்கானல், நவ.04-

கொடைக்கானல் அருகேயுள்ள பேத்துப் பாறையில் புளிப்புச் சுவையையும், இனிக்க வைக்கும் 'மிராக்கிள் ஃப்ரூட்' எனப்படும் அதிசயப் பழம் காய்த்துக் குலுங்குகிறது.

கொடைக்கானல் மலைப்பகுதியில் பிளம்ஸ், பேரிக்காய், அவகடா, பிச்சீஸ் உள்ளிட்ட பழ வகைகள் அதிகளவில் சாகுபடியாகின்றன. இங்கிருந்து வெளி மாவட்டங்கள் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் அதிகளவு விற்ப னைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இங்கு விளையும் பழங்களுக்கு மவுசு அதிகம் என்பதால் ஏராளமான விவசாயிகள் கொடைக்கானல் தட்ப வெப்ப நிலையில் விளையும் பழக்கன்றுகளைப் பயிரிட்டுள்ளனர்.



இந்நிலையில், கொடைக்கானல் அருகேயுள்ள பேத்துப்பாறையில் கோவையைச் சேர்ந்த தொழிலதிபர் பிரவீன் என்பவர் தனது தோட்டத்தில் மேற்கு ஆப்ரிக்காவை தாயகமாகக் கொண்ட 'மிராக்கிள் ஃப்ரூட்' எனப்படும் அதிசயப் பழ மரத்தை வளர்த்து வருகிறார். தற்போது இந்த மரத்தில் சிவப்பு நிறத்தில் பழங்கள் காய்த்து கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன. இந்தப் பழத்தை சாப்பிட்டவுடன் புளிப்பு, துவர்ப்பு சுவை கொண்ட எதைச் சாப்பிட்டாலும் இனிப்புத் தன்மை உடையதாக மாற்றும் திறன் இந்தப் பழத்துக்கு உண்டு. அதனால் பலரும் இந்தப் பழத்தை ஆர்வமுடன் பறித்து ருசிக்கின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறும்போது, `கொடைக்கானல் மலையில் ஒரு சிலர் வெளிநாடுகளில் மட்டுமே விளையக்கூடிய பழக்கன்றுகளை நட்டு வளர்க்கின்றனர். அதுபோல், பேத்துப்பாறையில் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 'மிராக்கிள் ஃப்ரூட்' பழக்கன்று வளர்க்கப் படுகிறது. தற்போது, அதில் நாவல் பழம் அளவில் சிவப்பு நிறத்தில் பழங்கள் காய்த்துக் குலுங்குகின்றன. இந்தப் பழத்தைச் சாப்பிட்டவுடன், புளிப்புத் தன்மை கொண்ட எலுமிச்சம் பழம், ஊறுகாயைச் சாப்பிட்டாலும் புளிக்காது. மாறாக, தேன்போல இனிக்கும்', என்றனர்.

## தஞ்சை மாவட்டத்தில் 2.24 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது

### நுகர்பொருள் வாணிபக் கழகம்

சென்னை, நவ.04-

தஞ்சை மாவட்டத்தில் 2.24 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவித்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மேலும் 50,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய வாய்ப்பு உள்ளது. தஞ்சையில் 2024ல் 1.28 லட்சம் மெ.டன் கொள்முதல் ஆன நிலையில் தற்போது 86,000 மெட்ரிக் டன் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 44,286 விவசாயிகளுக்கு ரூ.541 கோடி ஆன்லைன் மூலம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இன்னும் 10 நாளில் நெல் கொள்முதல் பணிகள் நிறைவடையும் என நுகர்பொருள் வாணிப கழகம்தகவல் தெரிவித்தது.


## பத்திரம் காணவில்லை

ஞானமுத்து 34/1 ராஜேந்திர பிரசாத் தெரு சிவகங்கை என்ற முகவரியில் வசித்து வரும் ஷி.ஞானமுத்து என்பவரது அசல் பத்திரம் கடந்த 25.10. 2025 அன்று சிவகங்கை கோர்ட் வாசல் அருகில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வீடு திரும்பும் பொழுது அசல் பத்திரம் என். (4670/2012) தவறி விழுந்து விட்டது யார் கையிலும் கிடைக்கும் பட்சத்தில் கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொண்டு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்து ஆன்லைன் மூலம் புகார் அளிக்கப்பட்டுள்ளது ஆன்லைன் புகார் என். MAG25554560 02.11.2025 அன்று ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது

**S. ஞானமுத்து**
34/1 ராஜேந்திர பிரசாத் தெரு சிவகங்கை
PH. 6384874687




## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, நவ.04-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். தாட்கோ மூலம் 01 பயனாளிக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (CM-ARISE) ரூ.9.60 இலட்சம் மதிப்பிலான சுமை வாகனத்தின் சாவியினையும், உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுவிற்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரியம் மூலம் பதிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 375 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெயசந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தண்டபாணி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) திரு.க.ராஜ்குமார், உதவி மேலாளர் திரு.ரா.அருணாசலம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எஸ்ஐஆர் பணிகள் குறித்து அச்சம் தேவையில்லை: ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் உறுதி



சென்னை, நவ.04-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப்பார்த்தைவிட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம், சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது.

சென்னை தியாகராய நகர், தாம்பரம் தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இறந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், தகுதியற்றவர்கள் மற்றும் இரட்டை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி, தி.நகர் முன்னாள் எம்எல்ஏ சத்தியநாரணயன் மற்றும் தாம்பரம் தொகுதியைச் சேர்ந்த அதிமுக வழக்கறிஞர் விநாயகம் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா மற்றும் அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான நிரஞ்சன் ராஜகோபால், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் நடைபெறும் என்றும், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிகள் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அக்டோபர் 27 ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், நாளை முதல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

இப்பணிகள் முழுமையான வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். ஒவ்வொரு வாக்காளருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்த படிவங்களை சரிபார்த்து டிசம்பர் மாதம் 9ம் தேதி சிறப்பு தீவிர திருத்த பணிகள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அப்போது வரைவு பட்டியலுக்கு ஆட்சேபம் தெரிவிக்கலாம் என்றும் அதை முழுமையாக பரிசீலித்த பிறகே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

1950ம் ஆண்டுக்கு பிறகு 10 முறை சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் 2005 ம் ஆண்டிற்கு பின் 20 ஆண்டுகளுக்கு பின் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப்பார்த்ததைவிட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதுபோல கரூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்தவர்களின் பெயர்களை நீக்கக் கோரி முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணைய தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

இந்த வாதங்களை பதிவுசெய்து கொண்ட நீதிபதிகள் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நவம்பர் 13 ம் தேதி விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட்டனர்.

## அனில் அம்பானியின் ரூ.3000 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் முடக்கம்

### அமலாக்கத் துறை நடவடிக்கை




மும்பை, நவ.04-

பண மோசடி வழக்கில் தொழிலதிபர் அனில் அம்பானிக்கு சொந்தமான ரூ.3,000 கோடிக்கும் அதிகமான சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

அனில் அம்பானிக்குச் சொந்தமான ரிலையன்ஸ் குழுமங்களுக்கு எதிராக பண மோசடி வழக்குகள் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக இந்த சொத்துக்களை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

மும்பையின் பாலி ஹில்லில் உள்ள அனில் அம்பானியின் வீடு, டெல்லி மகாராஜா ரஞ்சித் சிங் மார்க்கில் உள்ள ரிலையன்ஸ் மையத்துக்குச் சொந்தமான நிலம், டெல்லியில் உள்ள ரிலையன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான பிற சொத்துக்கள், நொய்டா, காசியாபாத், மும்பை, புனே, தானே, ஹைதராபாத், சென்னை, கிழக்கு கோதாவரி ஆகிய இடங்களில் உள்ள சொத்துக்கள் ஆகியவற்றை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.3,084 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் ஹோம் ஃபைனான்ஸ் லிட்., ரிலையன்ஸ் கமர்சியல் ஃபைனான்ஸ் லிட். ஆகிய நிறுவனங்கள் மூலம் திரட்டப்பட்ட பொது நிதி, வேறு பயன்பாடுகளுக்கு திருப்பப்பட்டதாகவும் இதன்மூலம் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. 201719 ஆண்டுகளில் யெஸ் வங்கி, ரிலையன்ஸ் ஹோம் ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்தில் ரூ.2,965 கோடியும், ரிலையன்ஸ் கமர்சியல் ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்தில் ரூ.2,045 கோடியும் முதலீடு செய்துள்ளது.

2019க்குள் இந்த முதலீடுகள் செயல்படாத முதலீடுகளாக மாறியுள்ளன. 2019ல் ரிலையன்ஸ் ஹோம் ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்துக்கு ரூ.1353.50 கோடியும், ரிலையன்ஸ் கமர்சியல் ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்துக்கு ரூ.1984 கோடியும் நிலுவையில் இருந்துள்ளன.

ரிலையன்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் உட்பட பல குழும நிறுவனங்களால் ரூ.17,000 கோடிக்கும் அதிகமான நிதி முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக அனில் அம்பானிக்கு எதிராக அமலாக்கத் துறை குற்றம் சாட்டியுள்ளது. கடந்த ஜூலை 24 அன்று மும்பையில் ரிலையன்ஸ் குழுமங்களுக்கு சொந்தமான 35 இடங்களில் செயல்பட்டு வரும் 50 நிறுவனங்கள் மற்றும் 25 முக்கிய நபர்களிடம் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இதையடுத்து, கடந்த ஆகஸ்ட் மாதம் அமலாக்கத் துறை அனில் அம்பானியிடம் விசாரணை நடத்தியது.

## பருவமழைக்கு முன்பே கொடைக்கானலில் தொடங்கியதா பனிக் காலம்?



கொடைக்கானல், நவ.04-

வடகிழக்குப் பருவமழை முடிவடைவதற்கு முன்னதாகவே கொடைக்கானல் மலைப்பகுதியில் நீர்ப் பனிக் காலம் தொடங்கியதால், அதிகாலை நேரங்களில் பனி படர்ந்து சூரியன் உதித்த பிறகு அவை நீராவியாகச் செல்லும் ரம்மியான காட்சியை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்கின்றனர்.

கொடைக்கானலுக்கு சீசன் காலங்கள் மட்டுமின்றி ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகள் வருகை உள்ளது. மழைக் காலம், பனிக் காலங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகம் காணப்படும். இந்நிலையில் வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு சில வாரங்களுக்கு முன்பே தொடங்கிய நிலையில் , தற்போது நிலபரப்புகளில் அதிக வெயில் உள்ளது.

அதேநேரம் மலைப் பகுதியில் அதிக குளிர் உணரப்படுகிறது. வடகிழக்குப் பருவமழை இன்னும் முடிவுக்கு வராத நிலையில், கொடைக்கானல் மலைப்பகுதியில் தற்போதே நீர் பனி படரத் தொடங்கி உள்ளது. கொடைக்கானலில் இரவில் 17 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்படுகிறது. இதனால், கடும் குளிர் நிலவுகிறது.

இந்நிலையில் அதிகாலையில் செடிகள், ஏரி நீர் ஆகியவற்றின் மேல் நீர்ப் பனி படர்ந்து காணப்படுகிறது. அதிகாலை சூரியன் உதிக்கத் தொடங்கியவுடன் நீர்ப் பனி நீராவியாக வெளியேறுகிறது. வழக்கமாக மார்கழி மாதம் தொடங்கும் முன்னதாகவே வடகிழக்குப் பருவமழை முடிவுக்கு வரும். டிசம்பர் மாத இறுதியில் கடும் பனிப் பொழிவு இருக்கும். ஆனால் தற்போது முன்னதாக நவம்பர் தொடக்கத்திலேயே இந்த நிலை காணப்படுகிறது. இதனால் வடகிழக்குப் பருவமழை முழுமையாகத் தொடருமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏரியைச் சுற்றிய பகுதிகளில் காலையில் தற்போதே பனிபடர்ந்து காணப்படுகிறது. காலையில் ஏரிச்சாலையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் நீர்ப்பனி ஆவியாகிச் செல்லும் ரம்மியமான காட்சியை ரசிக்கின்றனர். பகலில் மிதமான வெயில், இரவில் கடும் குளிர் என கொடைக்கானலில் தட்பவெப்ப நிலை உள்ளது. காலையில் குளிர் அதிகநேரம் நீடிப்பதால் சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகம் இன்றி அளவாகவே காணப்படுகிறது.

## ‘தமிழ்நாட்டின் மகள்களுக்கு பாதுகாப்பு தர முடியாத திமுக அரசு வெட்கப்பட வேண்டும்’ தவெக



சென்னை, நவ.04-

கோவையில் கல்லூரி மாணவியின் நண்பரை தாக்கி அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்திருப்பது தமிழ்நாட்டையே அதிரவைத்துள்ளது. தமிழ்நாட்டின் மகள்களுக்கு பாதுகாப்பு தர முடியாத திமுக அரசு வெட்கப்பட வேண்டும் என தவெக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தவெக கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது என்பதற்கு, கோவை தனியார் கல்லூரி மாணவி மீது நிகழ்த்தப்பட்ட கூட்டு பாலியல் வன்முறை மற்றுமொரு சாட்சி.

போதை கலாச்சாரத்தால் தமிழகத்தின் இளைஞர்கள், மாணவர்கள் சீரழிந்து வருகிறார்கள் என்று பலமுறை வலியுறுத்தியும் இந்த போலி ‘அப்பா’ மாடல் அரசு எந்த ஒரு நடவடிக்கையும் முறையாக எடுக்காத காரணத்தால், போதையின் பாதையில் சென்ற அந்த கூட்டம் நேற்று (2112025) இரவு கோவை மாநகர் விமானநிலையம் ஒட்டியுள்ள பகுதியில், தனியார் கல்லூரி மாணவியின் நண்பரை தாக்கி அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்திருப்பது தமிழ்நாட்டையே அதிரவைத்துள்ளது.

தமிழ்நாட்டின் மகள்களுக்கு பாதுகாப்பு தர முடியாத தி.மு.க அரசு வெட்கப்பட வேண்டும். குற்றவாளிகள் அச்சமின்றி சுற்றுகிறார்கள், ஏனெனில் முதல்வரின் இரும்புக் கை, தமிழ்நாட்டு மகள்களை அல்லஞ் திமுக அமைச்சர்களை அமலாக்கத் துறையில் இருந்து காப்பாற்ற தான் பயன்படுகிறது!

திமுக ஆட்சி அராஜகம் செய்பவர்களுக்கான ஆட்சி என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. தமிழ்நாட்டில் காவல்துறை ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிசம்பர் 9-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும்; ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே இறுதி வாக்காளர் பட்டியல்

### உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை, நவ.04-

வரைவு வாக்காளர் பட்டியல் மீது ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்ட பிறகே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது.

சென்னை தி,நகர், தாம்பரம் தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் இடம்பெறுள்ள இறந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், தகுதியற்றவர்கள் மற்றும் இரட்டை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்குமாறு தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி, தி.நகர் முன்னாள் எம்.எல்.ஏ சத்தியநாரணயன், மற்றும் தாம்பரம் தொகுதியை சேர்ந்த அதிமுக வழக்கறிஞர் விநாயகம் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, மற்றும் அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான நிரஞ்சன் ராஜகோபால், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் நடைப்பெறும் என்றும் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிகள் நடைபெறும். தற்போது தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் சிறப்பு திருத்த தீவிர பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அக்டோபர் 27 ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், நாளை முதல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் துவங்கப்பட உள்ளன. இப்பணிகள் முழுமையான வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு வாக்காளருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்த படிவங்களை சரிபார்த்து டிசம்பர் மாதம் 9ம் தேதி சிறப்பு தீவிர திருத்த பணிகள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அப்போது வரைவு பட்டியலுக்கு ஆட்சேபம் தெரிவிக்கலாம். அதை முழுமையாக பரிசீலித்த பிறகே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். 1950ம் ஆண்டுக்கு பிறகு 10 முறை சிறப்பு தீவிர திருத்த பணிகள் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2005ம் ஆண்டிற்கு பின் 20 ஆண்டுகளுக்கு பின் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளபடுகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப்பார்த்தைவிட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்றார்.

இதுபோல கரூர் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்தவர்களின் பெயர்களை நீக்க கோரி முன்னாள் அமைச்சர் எம். ஆர் விஜயபாஸ்கர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணைய தரப்பு வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார். இந்த வாதங்களை பதிவுசெய்து கொண்ட நீதிபதிகள் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் நவம்பர் 13ம் தேதி விசாரணைக்கு பட்டியலிட வேண்டும். அன்றைய தினம் இந்த வழக்குகள் மீது உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிட்டனர்.

## திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்தில் பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பு: அன்புமணி



சென்னை, நவ.04-

கோவையில் தனியார் கல்லூரி மாணவியை கடத்திச் சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த மனித மிருகங்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கோவை விமான நிலையத்திற்கு பின்புறமுள்ள பிருந்தாவன் நகர்ப் பகுதியில் நண்பருடன் பேசிக் கொண்டிருந்த தனியார் கல்லூரி மாணவியை 3 பேர் கொண்ட கும்பல் கடத்திச் சென்று கொடிய முறையில் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டில் மாணவிகளும், சிறுமிகளும் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவது கண்டிக்கத்தக்கது.

பிருந்தாவன் நகரில் தனியார் கல்லூரி மாணவி தமது நண்பருடன் பேசிக் கொண்டிருந்த போது அங்கு வந்த 3 பேர் கொண்ட கும்பல், அவர்களிடம் தகராறு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து மாணவியும், அவரது நண்பரும் காரில் ஏறி அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். ஆனால், அவர்களின் காரை தடுத்து நிறுத்திய கும்பல், மகிழுந்தின் கண்ணாடிகளை உடைத்து மாணவியையும், அவரது நண்பரையும் வெளியே இழுத்துள்ளனர்.

நண்பரைத் தாக்கி காயப்படுத்திய அவர்கள், மாணவியை அங்கிருந்து கடத்திச் சென்று கொடூரமான முறையில் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவியை இன்று காலை அங்குள்ள புதரில் கண்டெடுத்த காவல்துறையினர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த மாணவி பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த ஆண்டு திசம்பர் 23ஆம் நாள் மனித மிருகத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். அந்த அதிர்ச்சி விலகுவதற்கு முன்பே கடந்த ஜூலை 12ஆம் நாள் திருவள்ளூரை அடுத்த ஆரம்பாக்கம் என்ற இடத்தில் 8 வயது மாணவி அசாம் மாநிலத்தைச் சேர்ந்த கொடியவனால் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்.

இப்போது கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். திமுக ஆட்சியில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. தமிழ்நாட்டில் போக்சோ எனப்படும் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின்படி 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 6975 ஆக அதிகரித்திருக்கிறது. 2023ஆம் ஆண்டு இதே சட்டத்தின்கீழ் பதிவான 4581 வழக்குகளுடன் ஒப்பிடும் போது இது 2394 , அதாவது 52.30% அதிகம் ஆகும். இதற்கு தமிழக அரசும், காவல்துறையும் தான் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனை கட்டுக்கடங்காத அளவுக்கு பெருகியிருப்பது தான் இத்தகைய குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் ஆகும், போதைப் பொருட்களின் நடமாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வரும் போதிலும் திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கோவையில் தனியார் கல்லூரி மாணவியை கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த மனித மிருகங்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவிக்கு தரமான மருத்துவமும், மனநல ஆலோசனையும் வழங்க வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனைக்கு முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






# காரில் கடத்திவரப்பட்ட சுமார் 85 கிலோ கஞ்சா பறிமுதல்

திருச்சி, நவ.04-

திருச்சிராப்பள்ளி மாவட்டம். மணப்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இன்று (02.11.2025) மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள ஸ்ரீ ரத்தினகிரீஸ்வரர் ரைஸ் மில் அருகில் மணப்பாறை போக்குவரத்து காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.வெங்கடாசலம் மற்றும் இரண்டாம் நிலை காவலர் PC 2534 திரு.தினேஷ்குமார் ஆகியோர் வாகனத் தணிக்கை மேற்கொண்டிருந்த பொழுது, DL 08 CY 5499 பதிவு எண் கொண்ட Renault Fluence காரை தணிக்கை செய்ய மறித்த போது, வாகனத்தில் வந்தவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் சென்றனர். சந்தேகம் அடைந்த மேற்படி வாகன தணிக்கையில் ஈடுபட்ட போலீஸார் துரத்தி சென்று காரை மறித்த போது, காரில் வந்த நான்கு நபர்கள் காரை விட்டு விட்டு தப்பி சென்றனர். சம்பவம் குறித்து தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மணப்பாறை உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர், மணப்பாறை ஆகியோர் வாகனத்தை சோதனை யிட்டதில் சுமார் 85 ½ கிலோ கஞ்சாவை பதுக்கி எடுத்து வந்தது தெரியவந்தது.

2) மேற்படி சம்பவம் குறித்து, மணப்பாறை காவல் நிலைய குற்ற எண். 736/2025 u/s 8(c) r/w 20 (b) (ii) (c) 25 of NDPS ACT ன்படி வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டதில், காரில், போலி பதிவெண் கொண்ட நம்பர் பிளேட்டுகள் 5, மாரியப்பன் 25/25 த.பெ பிச்சைமணி, உத்தமபுரம், கம்பம், தேனிமாவட்டம் என்பவரது Employment ID கார்டு மற்றும் அஜித் 28/25 த.பெ தெய்வம், மந்தாய் அம்மன் கோவில் தெரு, கம்பம், தேனி மாவட்டம் (Aadhar No: 278684470751), 33/25 (Aadhar No: 245002759956) ஆகியோர்களது ஆதார் அட்டை நகல்கள் கிடந்தன. இதில், மேற்படி மாரியப்பன் என்பவர் மீது திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் கஞ்சா (NDPS) வழக்குகள் நிலுவையில் இருந்து வருவது தெரியவந்தது. இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகளை பிடிக்க திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செ. செல்வநாகரெத்தினம், இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு எதிரிகளை தேடிவருகின்றனர்.

3) மேலும், இது போன்ற அரசால் தடைசெய்யப்பட்ட போதை பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட மதிமயக்கும் பிற போதை வஸ்துக்கள். கஞ்சா விற்பனை, குட்கா விற்பனை, போலி மதுபான விற்பனை மற்றும் கள் விற்பனை போன்ற சட்டவிரோத செயல்களில் யாரேனும் ஈடுபடுவதாக தெரிய வந்தால் பொதுமக்கள் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உதவி எண் 8939146100க்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் கொடுப்போரின் பெயர் விலாசம் ரகசியம் காக்கப்படும்.

# கொள்ளை வழக்கில் சம்மந்தப்பட்ட 6 எதிரிகள் - போக்சோ வழக்கில் சம்மந்தப்பட்ட 1 எதிரி ஆகியோரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது




திருச்சி, நவ.04-

I) திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட SRM மருத்துவமனை அருகில், கடந்த 13.09.2025 ம் தேதி, காரில் வந்த தங்க நகை விற்பனையாளர்கள் மீது மிளகாய் பொடி தூவி. காரில் இருந்த சுமார் 10 கிலோ தங்கநகைகளை கொள்ளையடித்து சென்ற நபர்கள் மீது, சமயபுரம் கா.நி., குற்ற எண். 309(4) BNS @ 61(2), 310(2) BNS ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கின் எதிரிகளான வடமாநிலத்தை சேர்ந்த சுமார் 11 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

2) இந்நிலையில் மேற்படி சிறையில் இருந்து வரும் எதிரிகளான 1. பிரதிப் ஜாட் 24/25 S/O தூதாராம். பிச்சாகியோங் கா வாஸ், மல்கோசானி, ஜோத்பூர், ராஜஸ்தான், A2) அனுமான் ராம் 21/25 த/பெ கேமாராம், பில்லடா. மால்கோ சோனி, ஜோத்பூர் ராஜஸ்தான், A3) பண்ணாரம் @ வினோத் 31/25, S/o அமான் ராம். ஜத்திவாஸ், பில்லாடா, ஜோத்பூர், ராஜஸ்தான், A4) கைலாஷ் 21/25 த/பெ சிம்முராம், பில்லடா, மால்கோ சோனி, ஜோத்பூர் ராஜஸ்தான், A5) முகமது சோயில் கான் 21/25 த/பெ முகமது இம்ரான் கான், சோஜத்சிட்டி, பாலி மாவட்டம், ராஜஸ்தான், A6) மனோகர் 27/25 S/O தூதாராம், பிச்சாகியோங் கா வாஸ், மல்கோசானி, ஜோத்பூர், ராஜஸ்தான் ஆகியோர் மீது தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் அடைக்க திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ. செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் பரிந்துரையின் பேரில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தடுப்பு காவல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இன்று 02.11.2025ம் தேதி சிறையில் உள்ள எதிரிகளிடம் சார்வு செய்யப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

II) திருச்சி மாவட்டம், முசிறி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 44/25, U/s 87, 351(2) BNS & 5(1), 5(j) (ii) r/w 6(1) of POCSO Act , பெருமாள் 62/25 த.பெ ரெங்கசாமி, நாகமநாயக்கன்பட்டி, வீரமச்சான்பட்டி, துறையூர் என்பவர் பாதிக்கப்பட்ட சிறுமியை துறையூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேட்டாங்காடு, விளாந் தோப்பு பகுதியில் வைத்து மிரட்டி கட்டாயப்படுத்தி உடலுறவு கொண்டதாக தெரியவந்தது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் கொடுத்த புகாரின் பெயரில், மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கின் எதிரி கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

2) இந்நிலையில் மேற்படி சிறையில் இருந்து வரும் எதிரியான பெருமாள் 62/25 த.பெ ரெங்கசாமி, நாகமநாயக்கன்பட்டி, வீரமச்சான்பட்டி, துறையூர் என்பவர் மீது தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் அடைக்க திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ. செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் பரிந்துரையின் பேரில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தடுப்பு காவல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இன்று 02.11.2025ம் தேதி சிறையில் உள்ள எதிரியிடம் சார்வு செய்யப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3) மேலும் திருச்சி மாவட்டத்தில் ஜனவரி2025 முதல் தற்போதுவரை மொத்தம் 98 தடுப்பு காவல் ஆணை பிறப்பிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட எதிரிகளிடம் சார்வு செய்யப்பட்டுள்ளது.




■ சிவகங்கை மறை மாவட்ட சிவகங்கை பங்கில் இறந்தவர்களை அடக்கம் செய்ய கல்லறை தோட்டம் போதுமான அளவில் இல்லாததால் கிறிஸ்தவ மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். இதற்கு முன்பாக இருந்த கல்லறையில் உள்ள பகுதிகள் நிறைவுற்றதால் இனி வரக்கூடிய காலங்களில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு இடம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது கடந்த 4 ஆண்டுகாளாக கல்லறை நாளின் போது முன்னோர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் சிரமம் இருந்தது இதனை கருத்தில் கொண்டு போதிய அளவில் இடவசதி வேண்டி தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் சிவகங்கை மறை மாவட்டத்திற்கு அனைத்து கிறிஸ்தவர்கள் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய ஒரு ஏக்கர் நிலத்தை தமிழக அரசு வழங்கியது. இதற்கான ஆணையை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் (சிவகங்கை மாவட்ட ஆயர் லூர்து ஆனந்தின் வழிகாட்டுதலின்படி) சிவகங்கை பங்குதந்தை சுரேஷ் பெற்றுக் கொண்டார். சிவகங்கை மாவட்ட கிறிஸ்தவர்களின் சார்பில் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.மேலும் இதன் மூலம் இனி வரும் நவம்பர் 2 கல்லறை நாளின் போது இறந்தவர்களின் உடல் ஆன்மா சாந்தி அடைய முன்னோர்களுக்கு ஜெபம் செய்யப்படும்..




# மதுரை அப்போலோ கேன்சர் சென்டரில் செக்ஒலேட் விழிப்புணர்வு திட்டம்

மதுரை, நவ.04-

மதுரை அப்போலோ கேன்சர் சென்டர் 30 ஆண்டுகளுக்கும் சிகிச்சையில் மேலாக மருத்துவ சிறப்பான மருத்துவ நிபுணர்களைக் கொண்டு மிக துல்லியமான உயர்தரக திர்வீச்சு சிகிச்சை மற்றும் 360 டிகிரி ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சையை அளித்து வருகிறது. இந்நிலையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமான அக்டோபரில் புதிய முயற்சியாக

பெண்களுக்கு மிகவும் பிடித்த சாக்லெட் கொண்டு மார்பக புற்று நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் 'செக்ஓலேட்' எனும் விழிப்புணர்வு திட்டம் துவங்கப்பட்டது. இதுகுறித்தான செய்தியாளர்களின் சந்திப்பில் அப்போலோ மருத்துவமனை, மதுரை மண்டலத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். நிகில் திவாரி கூறியதாவது : GLOBO-CAN-இன் படி, இந்தியப் பெண்களி டையே புற்றுநோய் பாதிப்பு மற்றும் இறப்புக்கான முக்கியக் காரணமாக மார்பகப் புற்றுநோய் உள்ளது.இது 13.5% சதவீதமாகும். NCBI ஆய்வின்படி 30பெண்களில் வெறும் 1.6% பேர் மட்டுமே பரிசோதனை செய்துள்ளனர்.அதிக அதிக விழிப்புணர்வு முன்கூட்டிய தடுப்பதன் அவசரத் தேவைக்கு இந்த செக்ஒலேட்" சுயகவனிப்பு மிக அவசியமான ஒன்றாகும்.அதிநவீன தொழில் பாதியர் ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ் மருத்துவநிபுணர்களைக் கொண்டு அப்போலோ நிர்வாகம் பெண்களின் மார்பகம் சார்ந்த மருத்துவப் பிரச்சனைகளை சரி செய்வதை நோக்க மாகக் கொண்டு செயல் பட்டு வருகிறது.40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் வழக்கமான மார்பகப் பரிசோதனைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மற்றும், மார்பகப் புற்றுநோயின் 6 அபாயங்களை புரிந்து கொள்ளுமாறும் நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் எனவும் தெரிவித்தார். மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர் ராஜன் பேசுகையில்: செக்ஒலேட் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு சாக்லெட்கள் வழங்கப்படும்.அதன் உறையை க ஸ்கேன் செய்வதன் மூலம் மார்பகப் புற்றுநோய்க்கான நி சுயபரிசோதனை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்த புரிதல் ஏற்படுத்தப்படும். அப்போலோவில் வ ஆரோக்கியத்தை தேசிய முன்னுரிமையாகக் கருதி, ஆரம்பக் கண்டறிதல் ஐ மேம்படுத்துகிறோம்.செக்விஓலேட் முயற்சியின் மூலம் மார்பகப் புற்றுநோயை ஆரம்ப க நிலையிலேயே கண்டறிந்து தேவையான சிகிச்சையை " பெறலாம் என்றார்.

செய்தியாளர் சந்திப்பில் போது அப்போலோ மருத்துவமனை புற்று நோயியல் சிகிச்சை நிபுணர்கள் டாக்டர்.முத்துகுமாரசாமி, டாக்டர். தேவானந்த், டாக்டர். தீனதயாளன், புற்று நோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். சர்ப்பராஜன், டாக்டர்.பாலு மகேந்திரா, கதிர்வீச்சு புற்று நோயியல் நிபுணர்கள் டாக்டர். ஜெபசிங்,டாக்டர்.சதிஷ் ஸ்ரீனிவாசன், டாக்டர். ஆயிஷா ஃபாத்திமா,மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு மூத்த மேலாளர் பிரேம் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், விமான கோபுரத் திருப்பணிகள் தொடங்குவதற்காக விமான பாலாலய அபிஷேகம்

தேனி, நவ.04-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், விமான கோபுரத் திருப்பணிகள் தொடங்குவதற்காக அன்று (03.11.2025, திங்கட்கிழமை) விமான பாலாலய அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்வுகள்:

நேற்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை, அனுக்ஞை, மகா கணபதி ஹோமம் மற்றும் வாஸ்து சாந்தியுடன் முதற்கால யாக பூஜைகள் தொடங்கப்பட்டன.

இன்று (03.11.2025) அதிகாலை 6.00 மணிக்கு இரண்டாம் கால யாக பூஜைகள், கோ பூஜை மற்றும் பூர்ணாஹூதி நடைபெற்றது.

காலை 9:10 மணி முதல் 10:20 மணிக்குள் (தனுர் லக்னத்தில்), யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு செய்யப்பட்டு, மூலவர் மற்றும் விமான சித்திரப்பிரதிக்கு மகா அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

இந்த வைபவத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமியின் அருளைப் பெற்றனர். இந்த பாலாலயத்தைத் தொடர்ந்து விரைவில் திருப்பணிகள் தொடங்கப்படும் என திருக்கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விழா ஏற்பாடுகளைப் பரம்பரை அறங்காவலர் T.B.S.S.C.S. முத்துராஜன் மற்றும் செயல் அலுவலர் கி.சுந்தரி ஆகியோர் தலைமையிலான திருக்கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்



■ நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் நெடுஞ் சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர். சுரேஷ் அவர்களின் மேற்பார்வையில். நாச்சிப்புதூர் காளப்பநாயக்கன்பட்டி ஓடை பகுதியில் உள்ள சாலைகளின் ஆயுட்காலம் முடிந்ததால் அந்த சாலைகள் குண்டும், குழியுமாக பழுதடைந்து உள்ளது. எனவே சாலைகளை புதியதாக போடப்பட்டு வருகிறது..பழைய சாலைகளை முற்றிலும் மூன்று இன்ச் கனத்துக்கு களைந்து எடுத்து ஓடையின் கரைகளை வலுப்படுத்துவதுடன் அங்கு பழைய சாலைகளை ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றினர். பின்பு சாலைகள் தரமாக அமைக்கப்பட்டு வருகிறது.



■ மதுரை மாவட்டம், டாக்டர்.எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கத்தில் வரும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகப்கோப்பை நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.




■ மதுரை மாவட்டத்தில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் நாகமலை புதுக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டம் ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் (தணிக்கை) வீரராகவன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில் மணி,அழகு பாண்டி,ஊராட்சி மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வடிவேல், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.கூட்டத்தில் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, வேளாண் மற்றும் விவசாயத் துறை அதிகாரிகள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.ஊராட்சி செயலாளர் கண்ணன் ஊராட்சியில் நிறைவேற்றப்பட்ட நிறைவேற்றப்பட இருக்கின்ற திட்டங்கள் குறித்தான தீர்மானங்களை வாசித்தார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161